**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

| | | |
|---|---|---|
| **S.நாகராஜன்** | **K.சந்திரசேகரன்.** | **B.தியாகராஜன்** |
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** | **நிதிச்செயலாளர்** |

**சுற்றறிக்கை எண்: 17/2018** 23-10-2018

அன்புடையீர்,

வணக்கம்.ஏற்கனவே அறிவித்திருந்தபடி சங்கத்தின் 64வது மாநிலப் பொதுக்குழு கடந்த 14-10-2018 அன்று திருச்சியில் சிறப்பாக நடந்து முடிந்தது. 2018 – 2019ம் ஆண்டுகளுக்கான மத்தியச் சங்கப் பொறுப்பாளர்கள் தேர்தலுக்கான ஜனநாயகக் கடமையினை ஆற்றிட சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர்கள் 459 பேரில் 403 பேர் பொதுக்குழுவில் கலந்து கொண்டு பொறுப்பாளர்கள் தேர்தலில் வாக்களித்தனர். இது கணக்காயர் களத்தொழிலாளர் சங்கத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் எழுதப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும். நடைபெற்ற தேர்தலில் கீழ்கண்டவர்கள் மத்தியச் சங்கப் பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். (இது தொடர்பான தேர்தல் அலுவலரின் முறையான அறிவிப்பு நவம்பர் திங்கள் செய்திமடலில் வெளியிடப்பட உள்ளது).

| பொறுப்பு | தேர்ந்தெடுக்கப்பட்டவர் |
|---|---|
| சங்கத் தலைவர் | திரு.S.நாகராஜன் (கோவை வடக்கு வட்டம்) |
| துணைத் தலைவர் I | திரு.P.அன்பழகன் (கடலூர் வட்டம்) |
| துணைத் தலைவர் II | திரு.S.அபுத்தாயர் (திண்டுக்கல் வட்டம்) |
| பொதுச்செயலாளர் | திரு.K.சந்திரசேகரன் (நாமக்கல் வட்டம்) |
| இணைச்செயலாளர் I | திரு.S.மகாலிங்கம் (மதுரை பெருநகர் வட்டம்) |
| இணைச்செயலாளர் II | திரு.N.கணேசன் (எண்ணூர் அனல்மின் வட்டம்) |
| அமைப்புச் செயலாளர் | திரு.B.கோபால கிருஷ்ணன் (மேட்டூர் வட்டம்) |
| நிதிச்செயலாளர் | திரு.B.தியாகராஜன் (தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலகம், சென்னை) |
| மாநில மகளிர் அணிச்செயலாளர் | திருமதி.C.சுகந்தி (கடலூர் வட்டம்) |

மேற்கண்ட பொறுப்பாளர்கள் சார்பிலும் தேர்தலில் போட்டியிட்டு பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பை பெற இயலாத ஏனைய பொறுப்பாளர்கள் சார்பிலும் பொதுக்குழுவில் கலந்து கொண்டு தங்களது ஜனநாயகக் கடமைகளை ஆற்றிய பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மத்தியச் சங்கப் பொறுப்பாளர்கள் அனைவரும் கடந்த 22-10-2018 அன்று சென்னை சங்க அலுவலகத்திற்கு வருகை தந்து தங்களது கடமைகளை ஆற்ற துவங்கினர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். புதிய பொறுப்பாளர்கள் அனைவரும் வாரியத்தின் உயர்மட்ட அலுவலர்களை சந்தித்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

எதிர்வரும் 28-10-2018 அன்று சங்கத்தின் 183வது மாநிலச் செயற்குழுக் கூட்டம் சென்னையில் கூடி தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய சங்க நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்க உள்ளது.

மற்றபடி மத்திய சங்கத்தின் 07-10-2018 தேதிய சுற்றறிக்கை எண்:15/2018 வாயிலாக தெரிவித்திருந்தபடி இந்த ஆண்டிற்கான போனசு 8.33% கருணைத்தொகை 11.67% ஆக மொத்தம் 20% ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ.4000/- வழங்கிடவும் தமிழக அரசு ஆணைபிறப்பித்தது. அதன் அடிப்படையில் வாரிய ஆணை வழங்கப்பட உள்ளது. போனசு அநேகமாக இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும்.

நமது சங்கத்தின் ஜனநாயகக் கடமைகளை ஆற்றிட 15-07-2018 அன்று கடலூரில் நடைபெற்ற சங்கத்தின் 63வது மாநிலப் பொதுக்குழுவிற்காகவும் 14-10-2018 அன்று திருச்சியில் நடைபெற்ற சங்கத்தின் 64வது மாநிலப் பொதுக்குழுவிற்காகவும் ஏற்பட்ட நிதிச்சுமையை ஓரளவாவது ஈடுகட்டும் வகையில் பெற இருக்கின்ற போனசு தொகையில் குறைந்த பட்சம் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் ரூ.300ஐ நன்கொடையாக வசூலித்திடவும், வசூலிக்கப்படும் நன்கொடையினை கிளைகள், வட்டங்கள் மத்திய சங்கம் ஆகியவை தலா ரூ.100 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளவும், 22-10-2018 அன்று கூடிய மத்தியச் சங்கப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை செயல்படுத்திட அனைத்து பொறுப்பாளர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

மற்றபடி வருவாய் மேலாளரிலிருந்து, மதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு பட்டியலை அனுமதித்திட பதவி உயர்வு குழுக்கூட்டம் (D.P.C) ஓரிரு நாட்களில் நடைபெற உள்ளது.

கணக்கீட்டாளரிலிருந்து, கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட மேலும் 750 நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம் பெறும் கடைசி நபர் திரு. C.பெரியய்யா முதன்மை எண்:3377 சிவகங்கை மின்பகிர்மான வட்டம்.

வாழ்த்துக்கள்

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்: வட்டச் செயலாளர்கள்,மண்டலச் செயலாளர்கள், மத்திய சங்கப் பொறுப்பாளர்கள்.

குறிப்பு: இந்த சுற்றறிக்கையினை தேவையான நகல்கள் எடுத்து கிளைச்செயலாளர்களுக்கும் வட்ட மட்டத்தில் உள்ள ஏனைய பொறுப்பாளர்களுக்கும் விநியோகித்திட வட்டச்செயலாளர்களை வேண்டுகிறோம்.